2. அறிவிப்பு

பேரவை விதி 242-ன் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றிய முன்னறிவிப்பு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சட்டமன்ற பேரவை விதிகள் 242-வது விதியின் கீழ் பேரவைத் தலைவருக்குள்ள எஞ்சிய அதிகாரத்தின் கீழ், கீழ்க்கண்ட விதிமுறைகளை வகுத்து அவைக்கு அறிவிக்கிறேன்:—

உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றி முன் அறிவிப்பை காலை 8.30 மணிக்குள்ளாக பேரவைத் தலைவர் அவர்களுக்கும், செயலாளருக்கும் கொடுக்க வேண்டும். அவ்வாறே சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் காலை 8.30 மணிக்குள் சேர்ப்பிப்பது உறுப்பினர்களுடைய பொறுப்பு. பேரவைத் துறையில் கொடுத்திருந்தால் அது சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அனுப்பி வைக்க ஏற்பாடுகள் செய்யப்படும். ஆனால் காலை 8.30 மணிக்குள் அறிவிப்பு தனக்குக் கிடைக்கவில்லை என்று சம்பந்தப்பட்ட அமைச்சர் ஒரு எதிர்ப்பைத் தெரிவித்தால் அது சரியென ஏற்று ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான அறிவிப்பை நிராகரிக்க வேண்டிவரும். அன்றே எடுத்துக் கொள்ளாது அடுத்த நாளைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உறுப்பினர் விரும்பினால் அதற்கான காரணங்கள் இருப்பின் அந்த அறிவிப்பு அடுத்த நாளைக்கு அறிவிப்புக் கொடுத்ததாகக் கருதி அதன்படி அந்த அறிவிப்பு தலைவரால், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இந்த அறிவிப்பின்படி ஒத்தி வைப்புத் தீர்மானங்களை காலை 8.30க்குள்ளாகக் கொடுக்கவேண்டும் என்கிறது, இதை டைப் செய்து அவைத் தலைவரிடம் கொடுப்பதற்கு ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் தாமதமாகித் தான் கொடுக்க முடியுமே தவிர வேறு வழியே கிடையாது. ஆகவே அமைச்சரவையில் இருக்கின்ற அமைச்சர்கள், சம்பவங்களை—முக்கியமான விஷயங்களாக இருந்தால், கவனிக்கலாம். உறுப்பினர்கள் இதைப் பார்த்துக் கொடுப்பதற்கு 8.30 மணிக்குள் கொடுக்க வேண்டும் என்று சொல்வது சரியானதாக இல்லை. காலையில் பத்திரிகைகளைப் படித்த பின்னால் தான் பலசெய்திகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது. அதற்குப்பின் இங்கு பஸ் வருவதற்கு 8.15, 8.30 மணி ஆகிவிடுகிறது. அப்படியே இங்கு வந்தவுடன் டைப்பிஸ்ட் இருப்பதில்லை. எப்படியும் இதை டைப் செய்து முடிவதற்குள், 8.50, 9.00 மணி ஆகிவிடுகிறது. ஆகவே இதை 8.30 மணிக்குள்ளாக கொடுக்க வேண்டும் என்று நேரம் விதிப்பது உறுப்பினர்களுக்கு அசௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

*திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஒத்தி வைப்புத் தீர்மானம் என்பது, சட்டமன்ற முறைகளில் உயிர்நாடியாக இருக்கின்ற ஒன்றாகும். அவ்வப்போது ஏற்படுகின்ற உடனடிப்

பிரச்சினைகளை, அண்மையில் நடந்தவைகளைப் பற்றிய பிரச்னைகளைத்தான் ஒத்திவைப்புத் தீர்மானத்தில் கொடுக்கப்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட தீர்மானத்தை காலை 8.30 மணிக்குள் கொடுத்துத் தீரவேண்டும் என்று சொல்லுவது, சட்ட மன்ற முறைக்கு நியாயமாகத் தெரியவில்லை. அது மட்டுமல்ல. இதை அவைத் தலைவரிடத்தில் தரவேண்டும், செயலாளரிடத்தில் கொடுக்க வேண்டும், அமைச்சர் அவர்களிடத்திலும் கொடுக்க வேண்டும் என்று சொல்லுவது சட்டமன்ற பாரம்பரியத்துக்கே ஏற்றது ஆகாது. தலைவரிடத்தில் கொடுத்துவிட்டால் அது செயலாளரிடத்தில் கொடுக்கப்பட்டதாகத்தான் அர்த்தம். அமைச்சர் அவர்களுக்குக் கிடைக்கவில்லையென்றால் அதை ஏற்றுக் கொள்ளஇயலாது என்று சொல்வதும் பொருத்தமாகாது. எந்தெந்தஅளவுக்கு ஏற்றுக்கொள்வது என்றுதான்பார்க்க வேண்டுமே தவிர காலை 8.30 மணிக்குள் கொடுக்கப்படவில்லை என்றால் அது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்ற காரணங்களைச் சொல்லுவது ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்து விடும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட மன்ற விதி 42ன் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுக்க வேண்டுமென்றால், முக்கியத்துவமுள்ள, அவசரமான, பொது முக்கியத்துவமுள்ள காரியங்களுக்காகக் கொடுக்க வேண்டுமென்று பரவலாக சட்டத்திலே விதி இருக்கிறது. இம்மாதிரி பொது முக்கியத்துவமுள்ள பிரச்னைகளைப் பற்றிக் கேட்கும்போது, அதற்கான தகவல்களைச் சேகரிப்பதிலே எங்களுக்கும் சங்கடங்கள் எல்லாம் உள்ளன. அதையும் பேரவைத் தலைவர் அவர்கள் கவனிக்க வேண்டும். நேற்றைய தினம் மாணவர்கள் பிரச்சினைப்பற்றி முதல் அமைச்சர் பேசுகின்றபோது, அவர் கொடுத்த ஆதாரங்கள், தொடர்பான தகவல்கள் எல்லாம் ஏதோ அதிகாரிகள் கொடுத்ததை, அவர்களை நம்பியதாக இருக்கின்றது என்று சொல்லப்பட்டது ஆகவே, காலை 81/2 மணிக்கு ஒரு பிரச்சினையைக் கொண்டு வந்தால், அதுபற்றிய ஆதாரங்களைத் திரட்டி அல்லது விவரங்களைச் சேகரித்துப் பதில் சொல்வது என்பது எளிதான காரியமல்ல. ஆகவே, இந்த 81/2 மணி என்று சொல்வதையும், பேரவைத் தலைவர் அவர்கள் கொஞ்சம் பரவலாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்தின்படி, அவருக்குள்ள சங்கடங்களை எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் புரிந்து கொள்ளாமல் இல்லை. அதே நேரத்தில் தாங்கள் தெரிவித்த கருத்துக்களில் இறுதியாக ஒரு கருத்தைத் தெரிவித்தீர்கள். முதல் நாள் எடுத்துக்கொள்ள

12-4-1977

முடியாவிட்டால், மறு நாள் வசதியாக எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்திருக்கிறீர்கள். அதை மாத்திரம் நீங்கள் கடைப் பிடித்து, இந்த 8-1/2 மணி என்கிற வரையறையை நீக்கி, கருத்து தெரிவிப்பீர்களானால் அது எங்களுக்கும் சாதகமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: விதி 42-ன் கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுக்கின்றார்கள். அப்படிக் கொடுக்கும்போது, அதற்கான விவரங்களைச் சேகரிப்பதிலே சங்கடங்கள் இருக்கின்றன. எனவே, சபாநாயகர் அவர்களிடத்திலே 8-1/2 மணிக்குள் கொடுத்து விட்டு, அதை அமைச்சர் அவர்களிடத்திலும் அந்த நேரத்திற்குள் சந்தித்துக் கொடுக்க முடியாவிட்டால் அமைச்சர்களுக்கு தொலைபேசியின் மூலமாகவாவது தெரிவித்தால், அதற்கான விவரங்களைச் சேகரித்து பதில் தருவதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொன்னதில் நடைமுறையில் சிரமங்கள் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் டெலிபோனிலே தொடர்பு கொள்ளலாம் என்று சொன்னார்கள். ஆனால், ஆஸ்டலிலே உள்ள டெலிபோனிலே சீக்கிரமாகத் தொடர்புகொள்வது சாத்தியமல்ல. பல நிமிஷங்கள் காத்திருக்க வேண்டும். எனவே, காலை 8—1/2 மணிக்குள் கொடுக்க வேண்டுமென்பதிலே சிரமங்கள் இருக்கின்றன. எனவே, அலுவல் ஆய்வுக் குழுவில் இதைப் பற்றியும் எல்லாக் கட்சியினரும் விவரமாகப் பேசி, ஒரு நடைமுறையை வகுத்துக் கொள்வது நல்லதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் நடைமுறையிலே உள்ள சிக்கல்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நாங்கள் ஏதாவது அப்படித் தகவல்கள் கொடுக்க வேண்டுமென்றால், காலை 8 மணிக்கே ஆர். ஆர். செக்ஷனுக்கு வரவேண்டும். அப்படி வந்தாலும், அங்கே டைப்பிஸ்ட் இருப்பதில்லை. எனவே, தயவு செய்து ஒன்றுக்கு இரண்டு டைப்பிஸ்டுகளாக அங்கே போடவும். இப்படி டைப் செய்ய முடியாத காரணத்தினாலே, நான் பல சமயங்களில் அவசரத் தீர்மானமோ, ஒத்திவைப்புத் தீர்மானமோ கொடுக்க முடியாமல் போயிருக்கிறது. எனவே, இதற்கும் ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு நான் விதி முறைகளைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. இருந்தாலும், விதிமுறைகள் எப்படி இருக்கின்றன, எப்படி கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சொல்ல விரும்புகிறேன். விதி 43-ல்,

",A Member desirous of moving a motion for an adjournment of the business of the House for the purpose of discussing a definite matter of urgent public importance shall, before the commencement of the sitting of the Assembly at which he proposes to ask for leave of the House to make his motion hand to the Secretary three copies of a statement in writing of the matter proposed to be discussed and obtain the Speaker's consent to his asking for leave to make the motion." என்று இருக்கிறது.

(முற்பகல் 9.20)

இந்த விதிமுறைப்படி அட்ஜார்ன்மென்ட் மோஷன் இங்கே வருகிறது. ஆகவே, விதிமுறைப்படி ஸ்பீக்கரிடம்தான் நோட்டீசைக் கொடுக்க வேண்டும். காரியதரிசியையோ, அமைச்சரையோ தேடிக் கொண்டு போக முடியாது. அதேபோன்று ஹாஸ்டல் அறையிலிருந்து டெலிபோன் மூலமும் அமைச்சரைத் தொடர்பு கொண்டிருக்க முடியாது. ஆகவே, இப்போதுள்ள விதிமுறைகளின்படியே தொடர்ந்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் அனைவருக்கும் இருக்கின்ற தொல்லைகள் எனக்குத் தெரிகின்றன. எனக்கு இருக்கிற தர்ம சங்கடத்தையும் சொல்ல விரும்புகிறேன். உறுப்பினர்கள் காலை 8.55 மணிக்கு ஒத்தி வைப்புத் தீர்மானங்களைக் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். நான் அவற்றை அமைச்சருக்கும், செயலாளருக்கும் அனுப்பவே 9 மணிக்கு மேல் ஆகிவிடுகிறது. இங்கு சபைக்கு வந்தவுடன், ஒத்தி வைப்புத் தீர்மானம் எங்கே என்று கேட்கிறார்கள். ஆகவே, நடைமுறையில் இருக்கக்கூடிய சங்கடங்களைத்தான் தெரிவித்தேனே தவிர, வேறல்ல. உங்களுக்கு உடனடியாகத் தகவல் தெரிவிக்க இந்த முறையைக் கடைப்பிடிக்கலாம் என்று கருதினேன். அதே போல் பாராளுமன்றத்திலும் இருக்கிறது.

"Copies of the notice intended for the Secretary and the Speaker are received at the Parliamentary Notice Office and the copy intended for the Minister concerned has to be delivered to him by the member himself. In case copies of notice intended for the Speaker and the Secretary are delivered at or after 10-30 hours.

பாராளுமன்றம் எப்போது கூடுகிறது என்பது உறுப்பினர்களுக்குத் தெரியும்.

"at the Parliamentary Notice Office, the notice is not deemed to have been received in time and is disallowed on that ground"

பாராளுமன்றத்தில் அப்படி ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள். இதனால் உங்களுக்கும் சவுகரியமாக இருக்கும். ஆளும் கட்சியிலுள்ள அமைச்சர்களுக்கும் விவரங்களைச் சேகரித்துத் தருவதற்கு அவகாசம் இருக்கும். அந்த அரை மணி நேரம் அவகாசம் இருந்தால் போதும். பின்னர் விதிக்குழு கூடி இதைப் பற்றி என்ன முடிவு எடுக்கிறதோ அந்த முறையிலே நாம் மாற்றிக் கொள்ளலாம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தீர்மானத்தைக் கொடுத்த அன்று எடுத்துக் கொள்ள முடியாவிட்டால் மறுநாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்ற யோசனையைச் சொன்னார்கள். ஆகவே, அரை மணி முன்னதாக, எட்டரை மணிக்குத் தந்தால் தகவல்களைச் சேகரிக்க வசதியாக இருக்கும். சுருக்கெழுத்தர்கள் 8 மணிக்கே வந்தாக வேண்டுமென்று செயலாளரிடம் கூறியிருக்கிறேன். அப்படி உத்திரவும் போட்டுச் சொல்லியிருக்கிறேன். ஆகவே, தகவல் சேகரிக்க சிறிது அவகாசம் வேண்டுமென்ற முறையிலே தான் அரை மணி முன்னதாகக் கொடுக்க வேண்டுமென்று கூறினேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். உமாநாத் : ஒரே ஒரு விஷயம். பாராளுமன்ற செஷன் ஆரம்பிப்பது காலை 11 மணிக்குத்தான். அங்கே நீங்கள் சொல்லக்கூடியது போல் அரை மணி முன்னதாகக் கொடுக்க வேண்டுமென்பதில் ஆட்சேபணை இருக்க முடியாது. இங்கு நம்முடைய சபை காலை 9 மணிக்கு ஆரம்பமாகிறது. இந்த வித்தியாசத்தை நீங்கள் பார்க்க வேண்டும். ஆகவே 8.30 மணிக்கே கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அது மிகவும் சீக்கிரமாக இருக்கும். உங்களிடம் தீர்மானத்தைக் கொடுத்த பிறகு நீங்கள் அமைச்சர்களுக்கு அனுப்பி விவரம் கிடைக்கவில்லை என்று சொன்னால் மறுநாள் எடுத்துக் கொள்ளலாம். அந்த டிஸ்க்ரீஷன் உங்களுக்கு இருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களுக்கு இப்போது இருக்கும் சிக்கலைச் சொல்லியிருக்கிறார்கள், நியாயம்தான். பொதுவாக, 9 மணியிலிருந்து 10 மணிவரை கேள்வி நேரம் என்று இருக்கிறது. அந்த ஒருமணி நேர இடைவெளியில் அவசரமான காரியங்கள் பற்றி அமைச்சர்கள் விவரங்களைச் சேகரித்துத் தர முடியும். அமைச்சர்கள் எங்கு இருந்தாலும் தொலைபேசி மூலம் அரசு தொடர்பு கொண்டு தகவல்களைச் சேகரித்து 10 மணிக்குத் தர முடியும். இதுதான் இந்த அவையில் ஏற்கனவே நடந்து வந்த காரியமாகும். ஆகவே, அந்த ஒரு மணி நேரத்தைக் கவனத்தில் வைத்து அதையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். இப்போது இருக்கிற சூழ்நிலையை வைத்து இப்படி ஒருமுறையைக் கூறினால் அது உறுப்பினர்களுக்குச் சிரமத்தை ஏற்படுத்தும். அவையினுடைய உரிமையைப் பாதிக்கும் என்ற வகையில் இதைப் புனர் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஒரு யோசனை என்ற அளவிற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். உங்களுக்கு இருக்கிற சிரமமும் புரிகிறது. எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குள்ள சிரமங்களையும் இங்கே நாம் புரிந்து கொண்டு இருக்கிறோம். ஆகையினால் கூடுகின்ற சபை 9.30 மணி என்ற அளவிற்குக் கூடி 9 மணிக்குள் உங்களிடம் கொடுக்கிற அளவிற்கு ஏற்பாடு செய்தால் வசதியாக இருக்குமா என்பதைப்பற்றி நீங்கள் சிந்தித்து முடிவெடுக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சிந்திப்பதல்ல. ரூல்ஸ் கமிட்டியிலே முடிவெடுத்தால் நான் அந்த முடிவை கடைப் பிடிக்கத் தயாராக இருக்கிறேன். திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அங்கே 11 மணிஎன்ற அளவில் அவை கூடுவதால் அதிலே பல வசதிகள் ஏற்படுகின்றன. அங்கே அதற்குள் ஆபீஸ் திறந்து விடுவார்கள். அதிகாரிகள் வந்திருப்பார்கள், அவர்கள் மூலமாகத் தகவல்களைப் பெறுவதற்கு வசதிகள்கிடைத்து விடும், ஆகவே அதிலே சிரமம் இல்லை.

திரு. மு. கருணாநிதி : 9.30 மணி என்று சொன்னாரே, என்ன ஆயிற்று ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரூல்ஸ் கமிட்டியை கூட்டி நீங்கள் எல்லாம் முடிவு செய்யுங்கள்.

திரு. துரை முருகன் : அமைச்சரைப் பார்த்து நாங்கள் சொல்வது என்பது எல்லாம் நடைமுறையிலே முடியாது, ஆகவே அது வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் தங்கள் தொகுதி சம்பந்தப்பட்ட விஷயங்களுக்காக அமைச்சர்களிடம் போகும்போது இதற்குப் போகக் கூடாதா ?

திரு. துரை முருகன் : அந்த நேரத்திலே நாங்கள் குளிக்க வேண்டாமா ? அமைச்சரைப் போய் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா ?

3. உரிமைப் பிரச்சினை.

(அ) ‘‘ அண்ணா ’’ நாளிதழ்மீது உரிமை மீறல் பிரச்சினை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு, துரைமுருகன் அவர்களும், திரு. சாதிக் பாட்சா அவர்களும், ‘ அண்ணா ’ நாளிதழ்மீது கீழ்க்கண்ட அவை உரிமை மீறல் பிரச்சினையைக் கொடுத்துள்ளார்கள்.